# சொல்லுருபுகளின் வளர்ச்சி நிலைகள்

க.காளிமுத்து

*முனைவர் பட்ட ஆய்வாளர்,*

*தமிழ்த்துறை,*

*பாரதியார் பல்கலைக்கழகம், கோவை - 046.*

**முன்னுரை**

பழங்காலம் முதல் இக்காலம் வரை மொழியின் வளர்ச்சி நிலைகள் மாற்றம் கண்டு உள்ளோம். நவீன உலகத்தில் மொழியின் பங்கு எண்ணற்றவை பொருளுக்கேற்ற உருபுகள் வளர்ச்சியடைந்துள்ளன. சொற்களஞ்சியம் உருவாக்குவதற்கு பொருளை இடத்திற்கு ஏற்றப்படி சொல்லுருபுகள் தேவைப்படுகின்றது.சொல்லுக்கு அழகு சேர்ப்பதற்க்காக சொல்லுருபுகள் பயன்படுகின்றது பொருளோடு சொல்லை உணர்த்தும்போது சொல்லுருபுகள் தேவைகளை உணர்கின்றோம்.

**"வெப்படைய அரண் கடந்து**
**துப்புறுவர் புறம் பெற்றிகிறேன்"**[1]

குளிர்ச்சி பொருந்திய ஆன்பொருநையின் நீரில் பாய்ந்து மகிழ்ச்சியான பொழுதே கழித்தனர் புகழ்மிக்க வானத்தை தொடும் அளவுக்கு சிறப்புடையது கருவூர் இப்படிப்பட்ட சிறப்புமிக்க அரசனை எதிர்த்து வரும் பகைவர்களுடைய வெம்மையுடைய அரணை அழித்தான் அதனால் வலிமையிழந்து புறம்காட்டி ஓடினர். பாடிய பெருங்கடுக்கோ என்ற சிறப்புக்குரிய சேர மன்னை பேய் மகள் இளவெயில் வீரத்தின் தழும்புகளை சிறப்பாக உருபுகளின் வழி அழகாக எடுத்துரைக்கின்றார்.

"உடைய" என்ற சொல்லுருப்புகள் பொருளை உணர்த்தும்போது பொருளை வீரத்தின் அடிப்படை பண்புகளை கூறுகின்றது அரசனின் வீரத்தை வாளைவுக்கு உயர்த்தி அறத்தை நிலைநாட்டுகின்றது. புறம் முதுகிட்டு ஓடும் பகைவர்களின் செல்வத்தை அழித்து வறியவர்களுக்கு கொடுக்கும் இயல்புடையது பெருங்கடுக்கோ சிறப்பாக சொல்லுருபுகளை அழகாக கையாளுகின்றார். வீரம், பண்புநலன் இரண்டையும் புறப்பாடல்கள் நகர்த்திச் செல்கின்றது. துணைபொருளாக நின்று பொருளை சிறப்புடையச் செய்கின்றது.

**"கடுங் கண்ண கொல் களீற்றால்**
**காப்பு உடைய எழு முருக்கி".**[2]

சிவந்த கண்களோடு தோற்றம் கொண்டு உயிரை பறிக்கும் யானையால் காவலுடைய மரத்தை உடைத்து அழகிய அணிகலன்களை அணிந்துவரும் யானையை அடக்கி அதன்முன் வீரத்தோடு காட்சி தருவான் சேரமான் செல்வக்கடுங்கோ வாழியாதன் பரிசில் பெறவருவோர்க்கு உடுத்த ஆடை அணிகலன்கள். அறுசுவை உணவு பரிசுப்பொருட்கள் அனைத்தும் கொடுத்தும் மகிழ்வடைய செய்வான் கொடுத்து சிவந்த உன்கை மெல்லியதாய் தோன்றும் கபிலர் அறத்தின் மேன்மைகளை சொல்லுருபுகளின் வழி உணர்த்திச் செல்கின்றார்.

போர்க்கு வலிமை சேர்க்கும் யானைகளை கொண்ட பகைவர்களை அழித்த வெற்றி அடைகின்றனர் "உடைய" சொல்லுருப்பு சேரமான் செல்வக்கடுங்கோ வாழியாதனின் ஆட்சிச் சிறப்புகளை அறத்தின் வழிநின்று உணர்த்துகின்றது. அரசன் வறியவர்களுக்கு பரிசில் மட்டும் அல்லாமல் உணவு, உடை, பொன் அணிகலன்கள்



© 2023, IRJTSR

போன்றவைகளை கொடுக்கும் வள்ளல். சேரமான் பாதுகாப்பு பொருளை உணர்த்துகின்றது இயற்கை பொருளோடு ஒன்றுணைந்து சிறப்படைய செய்கின்றது.

**"ஒளிரு மருப்பின் களிறு அவர**
**காப்பு உடைய கயம் பிடியினன்"[3]**

உம்முடைய வீரத்தால் பகைநாடுகள் நடுக்கம்பெறும் அளவுக்கு வெற்றி வீரர்களை கொண்டு அழித்துவிட்டாய் அதன்பின் கழுதைகளை கொண்டு எல்லா இடத்தையும் உழுதினாய் விளைந்த நல்ல வயல்களை அழித்துவிட்டனர் மற்றும் காவல் உடைய நீர் நிலைகளை கலக்கம் செய்கின்றாய் பாண்டியன் பல் யாகசாலை முதுகுடுமிப் பெரு வழியின் வீரத்தை நெட்டிமையார் மன உணர்வுகளை உருபுகளின் வழி உணர்த்துகின்றார்.

அஃறிணை பொருள்களுக்கு புறப்பாடல் மிகுதியாக உணர்த்துகின்றன. பகைவர் நாட்டை வென்று கழுதைகளை அழித்தனர் வீரத்தின் அடையாளமாகபகைவர் நாட்டை அழித்தனர். நெட்டிமையார் வீரத்தின் சிறப்புகளை சொல்லுருபுகள் வழியாக உணர்த்துகின்றார். தன்னை அழிக்கவரும் பகைவர்களை அழித்து தன்னுடைய நாட்டையும் மக்களையும் பேணிப் பாதுகாப்பது தலையாய கடமையாக அரசன் விளங்கினான் என்பதை பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழியின் ஆட்சிச்சிறப்புகளை அறிந்து கொள்ள முடிகின்றது. புறப்பாடல்கள் மனவுணர்வுகளை திரைப்படம் போல் காட்சியளிக்கின்றது. வாழ்க்கையின் மெய்ப்பொருளை உணர்த்துகின்றன.

**"நீடு குழி அகப்பட்ட**
**பீடு உடைய எறுழ் முன்பின்"[4]**

அறத்தின் செயலால் சிறப்புடன் விளங்கும் அரசனே அடர்ந்தக் காட்டில் நீளமான குழிகள் தோண்டி வைப்பார்கள் அக்குழியில் யானைகள் மாட்டிக்கொள்ளும் அப்போது பொய்பரப்புடைய குழிகள் யானைகள் மாட்டிக் கொள்ளும் தன்மைக் கொண்ட அந்தக்களிறு தந்ததால் நிலப்பகுதி குத்திச் சரிய செய்து மணல்வாரி தூர்த்திவிட்டு மேலே சென்று தன் இனத்தோடு சேரும் என்பர் யானைகள் குழிகளில் மாட்டிக்கொள்ளும் போதும் அறிவாற்றல் திறமையால் நம்பிக்கையோடு மேலே ஏறிவரும். அதுபோல தீமைகள் மிகுதியாக செய்தானும் அறத்தின் செயலால் நன்மைகளை பெறுவாய் என்ற நுட்பமான கருத்துக்களை குறுங்கோழியூர் கிழார் பாடி புகழ்ந்துள்ளார் அறத்தின் சிறப்புகளை உணர்ந்து கொள்ள முடிகின்றது.

**"தென் கடல் திரை மிசைப்பாயுந்து**
**துண் துமில் வன் பரதவர்**
**வெப்புடைய மட்டு உண்டு" [5]**

உழவர் கதிரவனின் வெப்பத்தால் வெறுப்படைந்து அதனால் தெளிந்த கடலின் மேல் பாய்ந்து வலிமையுடைய வன்பரதவர் வெப்பமுடைய மதுவை உண்டு குரலைக் கூத்து தாளத்திற்கு ஏற்றாற்போல் ஆடி மலைப்பகுதியில் வாழும் குறவர்கள் தன் இனத்தோடு தேனை உண்டு கூத்தாடுவார்கள் வெப்பத்தால் வெறுப்படைந்து அதனால் குறவர்கள் மகிழ்ந்துண்டு வாழ்வார்கள். குறவர்களின் வாழ்க்கை முறைகளை காட்சிப்படுத்துகின்றது. மாங்குடி மருதனார் மனவுணர்வுகளை வெளிப்படுத்துகின்றார் பாண்டியன் நெடுஞ்செழியன்.

**“நெல்லுடைக் கவளமொடு நெய்ம்மதி பெறாஅ**
**திருந்து அரைநோள் வெளில் விருந்த ஒற்றி”[6]**

அறத்தினை பேணக்கூடிய அரசனின் வாயில் கதவுகள் அடைத்திருந்ததைப் பார்த்த போருக்கு வெற்றியே தரக்கூடிய யானைகள் நெல்லையுடைய உணவைக்கவளத்துடன் உண்ணக் கொடுத்தாலும் உண்ணாமல் பிளிறுகின்றன. தூணில் கட்டிய கயிற்றை காய்த்துக் கொண்டு நிலத்தோடுச் சேர்ந்து புரளுகின்றன. “நெல்லுடைய” உருபுகளை சோழன் நெடுங்கிள்ளியை கோவூர்கிழார் அரசனின் வீரத்தை புகழ்ந்து பாடுகின்றார்.

யானைகள் போர்க்கு எந்த நேரமும் ஆய்த்த நிலையில்காத்துக் கொண்டிருக்கும் வெற்றி அடைய வேண்டும் என்ற மனநிலையோடு செயல்புரியும். வாழ்க்கையில் வெற்றி அடைய வேண்டும் எண்ணத்தோடு எந்தொரு செயலையும் நம்பிக்கையோடு செய்ய வேண்டும் என்ற தத்துவப் பொருளை புறப்பாடல்கள் உணர்த்துகின்றன.

**“கால் உளைக் கடும் பிசிர் உடைய”[7]**

வீரமொழிகளை கொண்டு பகைவர்களை வருத்தம் அடைய செய்து உலக்கையால் மிளகை இடித்து அதனால் வரும் ஒலி மிகுந்து காணப்படுகின்றது கடற்பரப்பில் அடிக்கின்ற முரசின் ஒலி வெற்றி புகழை ஒருங்குடன் சேர்ந்து கொண்டு காற்றால் பிசிராக உடையும் தன்மையுடையது பரணர் இப்புகழின் சிறப்புகளை பொருளின் மீது உணர்த்துகின்றார்.

போர் மறவர்கள் பகைவர்களை வெல்ல வீரமொழிகளை முழக்கமிடுவார்கள். அப்போது மன்னனின் ஆட்சி சிறப்புகள் அறத்தின் மேன்மைகள் போன்றவைகளை எடுத்தியம்புவார்கள் வெற்றியின் முரசு தனிச்சிறப்பு பெற்று விளங்கும் பரணர் போர்கள் நிகழ்வுகளை இயற்கையோடு ஒன்றிணைந்து பாடியுள்ளார் சொல்லுருபுகள் புறப்பாடல்களில் பயின்று வந்து வலிமையை செய்கின்றது

**“ கொண்டு” - சொல்லுருபு:**

**இன்னா ஆகப் பிறர் மண்கொண்டு**
**இனிய செய்தி நின் ஆர்வலம் முகத்தே**

நெட்டிமையால் வெற்றி பெற்ற அரசனை புகழ்ந்து பாடுகின்றார் பகைவர்கள் மண்ணை கைப்பற்றிக் கொண்டு செல்கின்றார். ஊம் புகழை பாடி வரும் பரிசிலாக்கு வேண்டியவற்றை கொடுத்து அவர்களுடைய தேவையான அனைத்து செய்துக்கொடுக்கும் மனம் உம்முடையது என்று புகழ்கின்றார்.

**“கூர்நல் அன்பின் கொடுவில் கூளியார்**
**கொள்வது கொண்டு கொள்ளா மிச்சில்”[8]**

அரக்கர்களுக்கு கொடுமை செய்த சூரபதுமனை முருகன் அழித்தது போல் முருக்கிவன் அவனுடைய வீரர்கள் கூர்மையான அம்போடு நிற்கின்றனர். வெற்றி பெற்ற வீரர்கள் அளவுக்கு அதிகமாக பொருட்களை எடுத்துக் கொண்டு மீதியுள்ள விளை நிலங்களை யாரும் உணவு உட்கொள்ளாதவாறு முற்றிலும் அழிக்கப்பட்டன. நெடுஞ்செழியன் அழிக்க “கொண்டு” சொல்லுருபுகளை பயன்படுத்துகின்றார்.

அரசன் இறைவனோடு ஒன்றி கொடுக்கும் அருள் பெற்றவள் தன்னை நாடி வரும் பாணர்களுக்கு கொடுக்கும் வள்ளல் தன்மையுடையவன் உதவும் மனப்பான்மைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பதை


© 2023, IRJTSR

உணர்த்துகின்றது. அறத்தின் மரபுகளை மறவாமல் சங்ககால மன்னர்கள் போற்றிப் பாதுகாத்தனர் என்பதை புறப்பாடல் வழியாக அறிந்து கொள்ள முடிகின்றது.

**"யாவீர் ஆயினும் கூழை தார் கொண்டு**
**யாம் பொழுதும் என்றல் உம்புமின் ஓங்குதிறல்"**[9]

வெற்றியை தரக்கூடிய வீரவேல் வைத்துள்ளான் அவனை வெல்ல யாராக இருந்தாலும் பின்னணி படைகளை கொண்டு அவனை வெல்ல முடியாது திரண்ட தோளும் அழகிய மார்பு பெற்றவன் என்ற ஔவையார் புகழாரம் சூட்டுகின்றார். பகைவர்கள் போர்க்களத்தில் படை திரண்டு வந்து அரசனை கொல்ல முடியாது ஏனென்றால் அறம், மறம் இரண்டும் அரசனிடம் வெற்றிழ வாளாக இருக்கின்றது. போர் அறிந்து மோதல் நன்று என்று ஔவையார் புகழ்ந்து பாடுகின்றார் அறத்தை நிலைநாட்ட வேண்டுமென்ற நோக்கத்தோடு ஔவையார் அரசனை புகழ்ந்து பாடியுள்ளார். தன்னிடம் இருக்கும் பொருட்களை வைத்துக் கொள்ள முடியாது. அறத்தையும் வீரத்தையும் கொண்ட அரசன் தான் வேந்தனை வெல்ல முடியும் என்று ஔவையார் கொண்டு சொல்லுருபுகள் வழியாக உணர்த்துகின்றார்.

**"இருநில மண்கொண்டு சிலைக்கும்**
**பொருநரும் உளரோ நீகளம் புகினே"**[10]

வீரத்திற்கு அடையாளமாக அரசனைப் புகழ்ந்து பாடுகின்றார் புலவர் புலியை எதிர்க்க கணைய மரத்தை ஒத்த நீண்ட வலிமை பொருந்திய கைகளை உடைய பெருமானே இந்நிலவுலகத்தில் மண் கொண்டு ஒலியெழுப்பு அரசர்களும் உளரோ என்று ஔைவயார் அரசனின் வீரத்தை புகழ்ந்து பாடுகின்றார். இவ்வுலகத்திற்கு நற்பண்புகளை புறப்பாடல்கள் உணர்த்துகின்றது ஔவையார் அறம் சார்ந்த கருத்துக்களை வெளிப்படுத்தும்போது புறப்பாடல்களளில் மிகுதியாக கையாளுகின்றார். தமிழ் உணர்வுகளோடு அறப்பண்பை வெளிப்படுத்தியுள்ளார் ஔவையார்.

**"ஒன்னார் யானை ஓடைப்பொன் கொண்டு**
**பரணர் சென்னி பொலியத் தை இ"**[11]

பகைவர்களுடைய யானை முககவசமாக அணிந்திருக்கும் அணிகலன்களை எடுத்து கொண்டு வெற்றின் கழிப்பில் வறுமையால் வாடும் பாணர்களுக்கு தலையில் கிரிடமாக அணியும் பெரும் மனம் கொண்ட திருமுடிக்காரி கொடை பற்றி நப்ப கலையார் புகழ்ந்து பாடுகின்றார்."பொன்" கொண்டு சொல்லுருப்புகள் புறப்பாடல்களில் மிகுதியாக பயின்று வந்துள்ளன. அரசர்கள் தன்னிடம் இருக்கும் அணிகலன்களை கொடுத்தும் தாம் தலையில் அணிந்த கிரிடத்தையும் கொடையாக கொடுக்கும் வள்ளல் திருமுடிக்காரி என்ற பாடப்படுகின்றது. மனம் நெகிழ்ந்து வறியவர்களுக்கு கொடுக்கும் மனநிலையோடு அரசர்கள் வாழ்ந்தார்கள். என்பதை புறப்பாடல்கள் உணர்த்துகின்றது. உணர்வுமிக்க பொருட்களோடு சொல்லுருபுகள் வலிமையடைகின்றது.

**"கார்வான் இன்றுரை தமியாள் கேளா**
**நெருநல் ஒரு சிறைப் புலிம்பு கொண்டு உறையும்"**[12]

**அடிக்குறிப்பு:**

[1] புற - ஞா.மாணிக்கவாசகன் பா: 30 (பக் : 11)
[2] புற - ஞா. மாணிக்கவாசகன் பா : 14 (பக் : 31)

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு*

[3] புற - ஞா. மாணிக்கவாசகன் பா : 15 (பக் : 38)
[4] புற - ஞா. மாணிக்கவாசகன் பா : 17 (பக் : 44)
[5] புற - ஞா. மாணிக்கவாசகன் பா : 24 (பக் : 64)
[6] புற - ஞா. மாணிக்கவாசகன் பா : 76 (பக் : 123)
[7] புற - ஞா. மாணிக்கவாசகன் பா : 81 (பக் : 154)
[8] புற - ஞா. மாணிக்கவாசகன் பா : 12 (பக் : 32)
[9] புற - ஞா. மாணிக்கவாசகன் பா : 23 (பக் : 66)
[10] புற - ஞா. மாணிக்கவாசகன் பா : 88 (பக் : 134)
[11] புற - ஞா. மாணிக்கவாசகன் பா : 90 (பக் : 135)
[12] புற - ஞா. மாணிக்கவாசகன் பா : 126 (பக் : 173)

## பார்வை நூல்கள்

[1] சோம இளவரசு - இலக்கண வரலாறு
[2] இரா.இளங்குமரன் இலக்கண வரலாறு
[3] தொல் (சொல்) இளம்பூரணர்
[4] தொல் (சொல்) சேனாவரையர்

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு*